2016

No. of Printed Pages : 3

2016 501593

**5906**

Register Number

இரண்டாம் ஆண்டு

# கற்றலை எளிதாக்குதலும் மேம்படுத்துதலும்

# FACILITATING AND ENHANCING LEARNING

(Tamil Version)

நேரம் : 3 மணி

மொத்த மதிப்பெண்கள் : 100

**அறிவுரை :** (1) அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப் பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாக தெரிவிக்கவும்.

(2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிகோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

**குறிப்பு :** பகுதி **ஆ** மற்றும் **இ**-க்கு ஒரு வரிக்கு **5** சொற்களுக்குக் குறையாமலும் பக்கத்திற்கு **20** வரிகளுக்கு மிகாமலும் விடையளிக்கவும்.

## பகுதி - அ

**I.** **அனைத்து** வினாக்களுக்கும் ஒவ்வொன்றிற்கும் **100** சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும். **15x2=30**

1. கல்வியில் தொழில்நுட்பம் என்றால் என்ன?

2. கற்பித்தலில் மாதிரிகளை பயன்படுத்துவதன் நோக்கம் என்ன?

3. பல் ஊடகம் என்றால் என்ன?

4. வகுப்பறை பற்றி ஜவஹர்லால் நேருவின் கூற்றை எழுதுக.

5. குழந்தையின் அடிப்படை தேவைகள் நான்கினை கூறுக.

6. பல் நிலை கற்பித்தல் என்றால் என்ன?

7. பல் வகுப்பு கற்பித்தலில் மாணவர்களை எவ்வாறு அமர வைக்க வேண்டும்?

[ Turn over

8. விழும கல்வி என்றால் என்ன?

9. மனவெழுச்சி நுண்ணறிவு குறித்து ஜாக்மேயரின் வரையறை யாது?

10. கற்றலின் மதிப்பீடு வரையறுக்க.

11. குறையறி சோதனை என்றால் என்ன?

12. தேர்வின் வகைகள் யாவை?

13. ஊனத்தின் வகைகள் யாவை?

14. மாணவர்களுக்கு எழுதுவதில் ஏற்படும் பிரச்சனைகளை குறிப்பிடுக.

15. பார்வைத்திறன் குறைபாடுடையோர் பயன்படுத்தும் கருவிகள் நான்கினை எழுதுக.

## பகுதி - ஆ

II. எவையேனும் **பத்து** வினாக்களுக்கு ஒவ்வொன்றிற்கும் 200 வார்த்தைகளுக்கு மிகாமல் விடையளிக்கவும். **10x4=40**

16. கற்றலை மேம்படுத்த தகவல் பரிமாற்ற தொழில் நுட்பத்தினைப் பயன்படுத்துவதால் ஏற்படும் மாற்றங்களை விவரிக்க.

17. கருவி பெட்டி தயாரித்தலை விளக்குக.

18. நமுவ பட வீழ்த்தியின் குறைகள் மற்றும் நிறைகளை எழுதுக.

19. கற்றல் கற்பித்தலில் புலன்களை தூண்டும் பொருட்களின் பங்கினை விளக்குக.

20. பல் வகுப்புப் கற்பித்தலில் ஆசிரியர் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் யாவை?

21. பல் வகுப்புச் சூழலில் ஆசிரியரின் பன்முகப் பணிகளை விளக்குக.

22. செயல்வழி கற்றல் முறையின் பயன்கள் யாவை?

23. விழுமங்களின் வகைகளை விளக்குக.

24. சிக்கல் - தீர்வு செயல் நிலையின் படி நிலைகளை விவரி.

25. கற்றல் இயலாமை பற்றி விளக்குக.

26. குழந்தைகளின் செவித்திறன் குறைப்பாட்டிற்கான பல்வேறு அறிகுறிகளை விளக்குக.

27. மனவளர்ச்சி குறைபாட்டிற்கான காரணங்கள் நான்கினை எழுதுக.

## பகுதி - இ

III. கீழ்க்கண்ட **மூன்று** வினாக்களுக்கு விடையளிக்கவும். ஒவ்வொன்றிற்கும் 500 வார்த்தைகளுக்கு மிகாமல் விடையளிக்கவும். **3x10=30**

28. (அ) கேள்வி காட்சி கருவிகளின் வகைப்பாட்டை கூறி இவை கற்றல் கற்பித்தலில் எவ்வாறு பயன்படுகின்றன என்பதை விளக்குக.

**அல்லது**

(ஆ) ஒரு சிறந்த வகுப்பறை சூழலை உருவாக்குவதில் ஆசிரியரின் பங்கினை விளக்குக.

29. (அ) பல்வகுப்பு கற்பித்தல் அணுகுமுறையில் நீ பார்வையிட்ட கற்றல் கற்பித்தல் நிகழ்வுகளை விளக்கமாக எழுதுக.

**அல்லது**

(ஆ) விழுமங்களில் பயிற்சி அளிக்கும் முறைகளை விவரி.

30. (அ) மாணவர்களின் மனவெழுச்சி நுண்ணறிவை எவ்வாறு அளவிடுவாய் என்பதை விவரி.

**அல்லது**

(ஆ) பேச்சுத்திறன் குறைபாட்டின் வகைகளை விளக்குக.

-o0o-